# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம்



ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: அஸ்மத் ஸர்வ குருப்யோ நம:
சரணாகதன் இங்குள்ள காலம் இருக்க வேண்டிய முறை
புருஷார்த்தகாஷ்டாதிகாரம் (குறிப்புகள்) - ஸ்வாமி தேசிகன் அருளிய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம்

பாகவதர்கள் மூலமாகவும் எம்பெருமானது சேஷித்வம் வெளிப்படுகிறது :

1. பிறருக்கு சந்தோஷத்தை உண்டு பண்ண வேண்டும் என்ற எண்ணம் எவைகளுக்கு தன்மையோ, அவைகள் சேஷன். சந்தோஷத்தை அடைபவன் சேஷி. ஆக, பகவத் சேஷனான ஒரு சரணாகதன், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு சந்தோஷத்தை உண்டு பண்ணக் கூடியதான பாகவத கைங்கர்யாத்தின் மூலமாகவும், எம்பெருமானது சேஷித்வத்தை வெளிப்படுத்துகிறான் எனக் கருத்து.


2. 'அமலன் ஆதிபிரான் அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன் விண்ணவர் கோன் விரையார் பொழில் வேங்கடவன் நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதிள் அரங்கத்தம்மான்

திருக்கமலபாதம் வந்து என்கண்ணி னுள்ளன வொக்கின்றதே' என்று திருப்பாணாழ்வார் அமலனாதிபாரானில் அருளிச் செய்தார்.

அதாவது, தூய்மையுடையவனாய், ஜகத்காரண பூதனாய், உபகாரகனாய், பரமபதத்துக்கு நிர்வாஹனாய், உயர்ந்த மதிள்களையுடைய கோயிலிலே கண்வளர்ந்தருளும் அழகிய மணவாளனுடைய திருவடித்தாமரைகள், தாழ்ந்தவனான என்னை அடியாருக்கு ஆட்படுத்தியவனாய்.
ஸ்வதந்த்ரனான ஒரு அரசன் தனக்கு இட்ட மாலை, ஆபரணங்களை தன் அடியார்களுக்கு இட்டு மகிழ்வது போலே, எம்பெருமானுக்கு சேஷனான என்னை 'தன் அடியார்க்கு ஆட்படுத்திய விமலன்'. இந்த நியதியினால், சரணாகதனுடைய பாகவத சேஷத்வம் மூலமாகவும் எம்பெருமானது சேஷித்வம் வெளிப்படுகிறது

4. 'நாரத: அஹமநுப்ராத:  த்வத்தர்ஷன குதூஹலாத் : ப்ரபேவா பகவத் பக்தா மாத்ருஷாம் ஸததம் த்விஜ' என நாரதர் பாத்மோத்தர ஸம்ஹிதையில் கூறும்போது,

பாகவதர்கள் தன்னைப் போன்றவர்களுக்கு எப்போதும் ஸ்வாமிகள் என்று பாகவத சேஷத்வத்தை சுட்டிக் காட்டுகிறார். அதன் வாயிலாகவும், பாகவதர்கள் மூலமாக சரணாகதனது பகவத் சேஷத்வத்தை அறியலாம்.



5. 'மற்றுமோர் தெய்வம்   உளதென்று இருப்பாரோடு உற்றிலேன் உற்றதும் உன் அடியார்க்கு அடிமை மற்றெல்லாம் பேசிலும் நின் திரு வெட்டெழுத்தும் கற்று நான் கண்ண புரத் துறை யம்மானே' என்கிறார் பெரிய திருமொழியில், ஸர்வேஸ்வரனானா ஸ்ரீமந் நாராயணனிடத்தில் ஸர்வ சாஸ்த்ர அர்த்தத்தையும் கேட்டு அறிந்த, திருமங்கையாழ்வார்.

அதாவது, அவர் கூறுவது, ஜீவர்கள் எம்பெருமானின் கட்டளைக்கு அடிபணிந்தவர்கள் என்பதாலும், அவன் அடியார்களுக்கு சேவை செய்வது இயல்பானது என்பதாலும், இந்த பாகவத கைங்கர்யம் உயிர் உள்ள வரை நீடிக்க வேண்டும் என்றாகிறது.

6. ஸ்ரீமத் ராமாயணத்தில், இளைய பெருமாள் சொற்களைக் கொண்டும் அறியலாம்.
'அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர்தாஸ்யமுபாகத: க்ருதஜ்ஞஸ்ய பஹுஜ்ஞஸ்ய லக்ஷ்மணோ நாம நாமத:'

அதாவது, 'நான் சக்கரவர்த்தி திருமகனாக போற்றப்படும் ஸ்ரீ ராமனின் தம்பி. அவனுடைய குண பூர்த்தியில் ஈடுபட்டு ஸ்ரீ ராமனுக்கு தாஸனாக இருக்கிறேன்'.

7. பாகவதர்களின் ஞானம் மற்றும் அவர்களின் குண பூர்த்தி காரணமாகவும் அவர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும்  என்னும் ஆர்வம் மேலும் மேலும் ஒரு சரணாகதனுக்கு அதிகரிக்கிறது. ஆக, இங்குள்ள காலம், பாகவதர்களுக்கு செய்யும் சேஷ வ்ருத்தி (அடிமைத் தொழில்) காரணமாக ஸர்வேஸ்வரனான எம்பெருமான் உகப்பதினால், பாகவதர் மூலமாகவும் எம்பெருமானது சேஷித்வம் வெளிப்படுகிறது என அறியலாம்.

7. 'நித்யம் ஸ்ரீயா ஸேமதஸ்ய பக்தை: ஆத்மமவத: ஸதா. ஸஹ ஸத்வாரகம் ச ஸ்யாத் சசேஷித்வம் பரமாத்மந:' என்று அருளியபடி,


'அகலகில்லேன்' என்று தன்னுடனேயே சேர்ந்து இருக்கும் பெரிய பிராட்டியாரோடு கூடிய ஸ்ரீமந் நாராயணன், தன்னுடைய அடியார்களான பாகவதர்களை தன் ஆத்மா எனக் கருதியும், தன் பத்னியாகிய பெரிய பிராட்டியுடன் சேர்ந்து தன் எஜமான தன்மையை வெளிக் காட்டிக் கொண்டும், தன் அடியார்களான பாகவதர்கள் மூலமாக தன் எஜமான தன்மையை வெளிக் காட்டிக் கொண்டும் உள்ளான்.

ஒரு சரணாகதன் அனுஷ்டிக்க வேண்டிய பாகவத சேஷத்வத்தின் ப்ரகாரம் :

1. 'ஆப்தோ விஷ்ணோ: அநாப்தஸ்ச த்விதா பரிகர: ஸ்ம்ருத: நித்யோ வந்த்யோ ந வாநித்ய: கர்மவஷ்யோ முமுக்ஷுபி:' என்ற பௌஷ்கர ஸம்ஹிதா வாக்யப்படி,

ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் பரிவாரங்களை இரண்டாக பிரிக்கப் பட்டு வணங்க வேண்டிய தகுதி விளக்கப்படுகிறது.

அதாவது, ஆப்தர்கள் மற்றும் அநாப்தர்கள்.



ஆப்தர்களாவர், கர்ம ஸம்பந்தம் அற்ற நித்யர் மற்றும் முக்தர்கள். மேலும், கர்ம ஸம்பந்தத்திலிருந்து விடுபட முயற்சித்து, சாஸ்த்ர சம்மதமான சரணாகதி அனுஷ்டானத்தை மோக்ஷ பலனுக்காக செய்து முடித்த பாகவதர்கள் ஆப்தர்களாவார்.

அநாப்தர்களாவர், கர்ம சம்பந்தத்தோடு கூடிய தேவர்கள் (ப்ருஹ்மா, ருத்ரன், இந்திரன் தொடக்கமான தேவர்கள்) மற்றும் கர்ம ஸம்பந்தத்தோட இருக்கும் இங்குள்ளவர்கள். ஒரு சரணாகதன் ஆப்தர்களுக்கு அடிபணிய வேண்டுமே அன்றிக்கு அநாப்தர்களுக்கு நிச்சயமாக அல்ல என்கிறது இந்த ஸம்ஹிதை.

2. பாப புண்ய கர்ம ஸம்பந்தமாவது, முக்குணங்களாலான ப்ரக்ருதி ஸம்பந்தத்தோடு கூடியது. கண்ணன் கீதையில் கூறும் போது, 'தைவி ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா. மாமேவயே ப்ரபத்யந்தயே மாயாமேதாம் தரந்திதே'

அதாவது, தன்னுடைய முக்குணங்களாலான மாயையை (ப்ரக்ருதியை) கடப்பதற்கு தன்னையே சரண் அடைய வேண்டும் என்கிறான் கண்ணன்.

3. ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் என்ற மூன்று குணங்களை கொண்டவை இந்த ப்ரக்ருதி. ஆதலால், இந்த ப்ரக்ருதியால் ஆன உலகங்கள் ( ப்ரும்மா இருக்கும் ஸத்ய லோகம் உள்பட), மற்றும் அவைகளில் உள்ள அனைத்து பொருட்களும் (நம் சரீரம் உள்பட) மூன்று குணங்களால் ஆனவை.

ப்ரக்ருதியில் இருக்கும் ஸத்வ குணமாவது, நேர்மையையும், நிதானத்தையும், உயர்ந்த விஷயங்களில் மன ஈடுபாடு போன்றவைகளை வளர்க்க கூடியது; ராஜஸ குணமாவது உலக விஷயத்தில் ஆசையையும், கோபத்தையும், பகை உணர்வு போன்றவைகளை வளர்க்க கூடியது; தாமஸ குணமாவது கடமையைச் செய்வதில் சோம்பலும், விஷயங்களை அறிவதில் குறைகளும், முடிவு எடுக்கும் திறன் இன்மை போன்றவைகளை வளர்க்கக் கூடியது.

கர்ம ஸம்பந்தம் கொண்ட அனைவரும் (ப்ருஹ்மா போன்றவர்கள் உள்பட) அடைந்திருக்கும் சரீரம், ப்ரக்ருதி சம்பந்தத்தினால் ஆனவை. ஆகையால், ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் மூன்று குணங்களால் ஆனவை ஆகும். ஒவ்வொருவரின் சரீரமும், அவர்களின் பாப புண்ய கர்மாவிற்கு ஏற்ப, வெவ்வேறு அளவில் ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் என்ற மூன்று குணங்களால் ஆகி உள்ளன. அதற்கேற்ப ஒவ்வொருவரின் எண்ணங்களும் செயல்களும் அமைகின்றன.

இக்குணங்களை கொண்ட சரீரம்,  ஒவ்வொருவருக்கும் அவர்களை பற்றிய உண்மை நிலையை சரிவர அறிய முடியாமலும் அல்லது தவறாக அறிந்து கொள்கிற படியும் இருக்கிறது. இந்த மாதிரியான சரீர சம்பந்தத்தையே கண்ணன் 'மாயை' என்று சொல்கிறான். அப்படி ப்ரக்ருதி ஸம்பந்தம் கொண்ட தேவர்கள் (ப்ருஹ்மா, சிவன் போன்றவர்கள் தொடக்கமாக அனைத்து தேவர்களும்) மற்றும் இங்குள்ள மோக்ஷ ருசி அற்றவரும் வணங்கத் தக்கவர்கள் அல்ல.

4. 'ததாஸ்ரித்த் தேவாநாம் அந்யேஷாம் பூஜநாத்து வை. ந தோஷோ ஹி யதா லோகே பர்து ப்ருத்ய கணஸ்ய ச' என்று பௌஷ்கர ஸம்ஹிதாயில் சொன்ன நியாயத்தாலே 'அடியார்க்கு தன்னை ஆட்படுத்த விமலன்' என்பது தெளிவாகிறது.


அதாவது, ஒரு பதிவ்ரதையான பெண் தன் கணவனைச் சேர்ந்த அவனுடைய மாதா, பிதா, ப்ராதா போன்றவர்களை, அவன் முன்னிலையிலோ அல்லது அவன் இல்லாத வேளையிலோ, கௌரவிப்பது குற்றமாகாது அல்லவா? அது போல் ஒரு சரணாகதன், தன் ஸ்வாமியான எம்பெருமானைச் சேர்ந்த அவன் அடியார்களை ஆராதிப்பதை, மிக உயர்வாக எண்ணி உகப்பான் என சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

இந்த அர்த்தத்தில், ஒரு சரணாகதனின் தெளிவினால், தான் நேரடியாகவும் பாகவதர்கள் மூலமாகவும் பகவானுக்கு அடிமையாக இருப்பது விளங்கும். ஆகவே, தன் சக்திக்கு ஏற்ப, ஒரு சரணாகதன், பாகவதர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும்.

5.. 'காசின்வாய்க்கரம் விற்கிலும் கரவாது மாற்றிலிசோறிட்டு தேசவார்த்தை படைக்கும் வண்கையினார்கள் வாழ்திருக்கோட்டியூர் கேசவா. புருடோத்தமா. கிளர்சோதியாய் குறளா என்று பேசுவார்அடியார்கள் எந்தம்மைவிற்கவும்பெறுவார்களே' என கல்ப ஸூத்ர வ்யாக்யாதாவான பெரியாழ்வார், தன் திருமொழியில் அருளிச் செய்தார்.

அதாவது, பாகவதர்கள்  ஒரு சரணாகதனை விற்கக் கூட உரிமை உள்ளவர்கள் என ,

சரணாகதனுக்கு உண்டான பாகவத பாரதந்த்ரயத்தை (அடிமைத்தனத்தை) மிகைப் படுத்தியும் . விளக்கி அருளினார். இவ்வாறு, ஒரு சரணாகதன் அனுஷ்டிக்க வேண்டிய பாகவத சேஷத்வத்தின் ப்ரகாரம் அமைகிறது.



1. பாகவதர்களுக்கு தொண்டு செய்வது, ஒரு சரணாகதனுக்கு, ஸ்வாபாவிகமாகவும் (இயற்கையா கவும்) மற்றும் ஔபா திகமா கவும் ( ஒரு சில காரண த்தாலும்) ஏற்படுவதைப் பற்றி வி ள க் க ம் :

பாகவதர்கள் என்பவர்கள் எப்போதும் :

# ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு மட்டுமே தான் தாஸ பூதர்கள் (மற்ற எந்த தேவதைகளுக்கும் அல்ல) என்ற தங்களுடைய இயற்கையான நிலையை உணர்ந்து,

# ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனையும், அவன் (ஸ்வரூப) தன்மை, (ரூப) உருவம், (குண) பண்பு, (விபூதி) சொத்துக்களையும் சாஸ்த்ரங்களினாலே அறிந்து, அவனையே பலனாக அடைய விரும்பி

# அதற்கான சாஸ்த்ரத்தில் விதிக்கப் பட்ட சரணாகதி அனுஷ்டானத்தை செய்தவர்கள்.

2. 'ததாஸ்ரய யஸ்யாஸ்ரயணாத் தஸ்ய தஸ்ய ச தஸ்ய ச. ஸம்ஸேவநாந்நரா லோகே பூயந்தே ஸர்வ பாதகை:' என்ற கருட புராண வசனத்தாலே,

பாகவதனை வணங்கினாலும், அல்லது அவனுக்கு பக்தன், அவனுக்கு பக்தன், அவனுக்கு பக்தன் என்று பாகவத பரம்பரையில் கடைசியில் உள்ளவருக்கு கைங்கர்யம் செய்தாலும் பாபங்கள் விலகும் என்பதை அறியலாம். ஆக, பாகவத அடியார்களும், அவர்களின் அடியார்களும், அர்களின் அடியார்களும், அந்த பரம்பரையில் உள்ள அனைவருமே பாகவதர்கள் என கொண்டாட தக்கவர்கள் என்பது கருத்து.

3. இதனால் பாகவதர்களிடம் இருக்கிற இயல்பான தன்னடக்கம் புலனாகும். 'தான்' எனும் ஆணவத்தை தவிர்க்கும் பொருட்டு தன்னை சிறுமைப்படுத்திக் கொள்வது பாகவதர்களுக்கு இயற்கை. மேலும் பரமனுக்கு அடிமை என்பதினும் அவன் உத்தம அடியார்க்கு அடிமை என்பதை பெரிதாக எண்ணுவது வைணவ மரபு. அதனாலேயே அரங்கனுடைய தொண்டர்களின் அடியாகிய திருவடியின் தூசி எனும் பொருள்பட "தொண்டரடிப்பொடி" என்றும், அரங்கனின் பக்தியில் ஆழ்ந்துப்போனவரை ஆழ்வார் என்று அழைப்பதற்கிணங்க ஸ்ரீ விப்ர நாராயணன், தொண்டரடிப்பொடியாழ்வார் ஆனார்.

4. இந்த பாகவத கைங்கர்யம், இங்குள்ள காலத்திலும், பிறகு வரும் மோக்ஷ காலத்தில், அதாவது வைகுண்டவாஸியாக பரமபதத்திலும், நீடிப்பதாக சாஸ்த்ரங்கள் கூறுவதால், பாகவத சேஷத்வம், ஒரு சரணாகதனுக்கு, ஸ்வாபாவிகம் (இயற்கையானது) என்று கொள்ளத் தகுந்தது.

5. அதையே, 'கைங்கர்ய நித்யநிரதைர் பவதே கபோகை: நித்யைரநுக்ஷண நவீன ரஸார்த்ரபாவை: நித்யாபி வாஞ்சித பரஸ்பர நீச பாவை: மத்தேவதை: பரிஜனைஸ்தவ ஸங்கஸீய' என்று ஸ்ரீகூரத்தாழ்வான் ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் எம்பெருமானைக் குறித்து திருவாய் மலர்ந்தருளினார்.

அதாவது, 'உன் கைங்கர்யங்களில் ஈடுபட்டு, எப்போதும் கைங்கர்ய வேளையில் பரஸ்பரம் தாஸ பாவம் பாராட்டும் எம் ஆசார்யர்களான, பகவத் ராமானுஜர், ஸ்ரீ ஆளவந்தார், ஆழ்வார் போன்றவர்கள் எம் தெய்வங்களே'. இதனால் பரமபதத்திலும் பாகவத தாஸத்வம் வெளிப்படுகிறது.

6. பாகவதர்கள் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு மிகவும் உகந்தவர்கள் என சாஸ்த்ரங்கள் தெளிவு படுத்துகின்றன. பாகவத அபசாரமாவது, ராஜதார அபசாரம் போன்றது என்கிறார் ஸ்வாமி தேசிகன். (ராஜாவிடம் அபசார பட்டவனுக்குக் கூட தண்டனை குறைவாக அமையலாம். ஆனால் ராஜாவின் பத்நியிடம் அபசாரப் பட்டவனுக்கு கடுமையான தண்டனை வந்தடையும் என்பது உலக நியதி). இவ்வாறு, பாகவதர்கள் பக்கலிலே உள்ள ஸர்வேஸ்வரனின் திரு உள்ளத்தை சாஸ்த்ரம் கொண்டு அறிகிறோம். ஆக, பாகவத சேஷத்வமானது, சாஸ்த்ர ஞான சம்பாத்யத்தினால் பகவான் இட்ட கட்டளையாக்க் கொண்டு வருவதால் ஔபாதிகம் (காரணத்தை முன்னிட்டு) என்றும் கொள்ளலாம்.

சரணாகதன் இங்குள்ள காலம் இருக்க வேண்டிய முறை
புருஷார்த்தகாஷ்டாதிகாரம் (குறிப்புகள்) - ஸ்வாமி தேசிகன் அருளிய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம்

பாகவதனான ஒரு சரணாகதனுக்கு, சேஷத்வம் (தொண்டு புரியும் தன்மை) மற்றும் சேஷித்வம் (மற்றவர் செய்யும் தொண்டை ஏற்கும் தகுதி) ஒன்று சேர உண்டாகுமோ என்பதன் விளக்கம் :

1. உலகத்தில் எத்தனையோ விளையாட்டுக்கள் இருக்கின்றன. கிரிக்கெட், வாலிபால், டென்னிஸ் முதலிய விளையாட்டுக்கள். இந்த விளையாட்டெல்லாம் உல்லாசமாகப் பொழுது போக்குவதற்கு உள்ளன. இங்கு நம் திவ்ய தம்பதிகள் சதுரங்கம் விளயாடுகிற அழகே ஒரு அழகு. ப்ரக்ருதி என்பது ஒரு சதுரங்கப் பலகை. இந்த மூல ப்ரக்ருதி என்னும் பலகைக்கு ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்கள் உண்டு. இந்தக் குணங்களுடன் கூடிய ப்ரக்ருதியே நமக்குச் சரீரமாக மாறுகிறது. அப்பொழுது இந்த முக்குணங்களும் வேலை செய்கின்றன என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பொறுமை, நல்லறிவு, தெளிவு, கோபதாபங்கள், துக்கம், சோம்பேரித்தனம் முதலியவை நமக்கு ஏற்படுகின்றனவே, அவைதாம் இந்த முக்குணங்களின் காரியம்.

2. 'தத: பரிவ்ருத்தௌ கர்மபல சேஷேண ஜாதிம் ரூபம் பலம் வர்ணம் மேதாம் ப்ரஜ்ஞாம் த்ரவ்யாணி தர்மாநுஷ்டாநம் இதி ப்ரதிபத்யதே' என்று ஆபஸ்தம்பரும் சொன்னார்.

அதனால், திவ்ய தம்பதிகளான ஸ்ரீமந் நாராயணன் இப்படி அவரவர்களுக்கு ஏற்பட்ட புண்ணிய பாபங்களைக் காரணமாகக் கொண்டு இந்த உலகங்களில் ஆட்சியில் வைத்தும், வேலையில் பணி அமர்த்தியும், ஸுக துக்கங்களைக் கொடுத்தும் லீலாரஸத்தை அநுபவித்துப் பொழுது போக்குகிறார்கள்.

3. 'லோகவத்து லீலா கைவல்யம்' என்கிற வியாஸ ஸூத்ரத்தின்படி தன் சந்தோஷத்துக்காகவே ஜகத் ஸ்ருஷ்டியை ஸர்வேஸ்வரன் செய்கிறான்.

ஆனால் இந்த விளையாட்டு 'அசித அவசிஷ்டான் ப்ரளயே ஜந்தூன் அவலோக்ய ஜாத நிர்வேதா l கரண களேபர யோகம் விதரஸி' என்று ஸ்வாமி தேசிகன் தயா ஸதகத்தில் அருளியபடி அசேதனத்துக்கு சமமாக பிரளய காலத்தில் கிடக்கும் சேதனர்களைக் கண்டு மனம் இரங்கி அவர்களுக்கு ஞானத்தைக் கொடுத்து நல்லதைச் செய்து நற்கதியை அடையட்டும் என்னும் எண்ணத்துடன் உடல் மற்றும் புலன்களைக் கொடுத்து ஸ்ருஷ்டிக்கிறான்.

ஆக இந்த விளையாட்டின் நோக்கம் பந்தயமோ, வெற்றியோ தோல்வியோ கிடையாது. திவ்ய தம்பதிகள், கர்மானுகுணமாகவே ஸ்ருஷ்டிக்கிறார்கள் என்றும் அவர்களின் இந்த செயல்கள் கருணையினாலே என்றும் தெரிகிறது.

'அகில புவன ஜன்ம ஸ்தேம பங்காதி லீலே' என்ற ஸ்ரீபாஷ்ய மங்கள ஸ்தோத்தரத்தாலும், பெருமாளும் பிராட்டியும் சேர்ந்தே எல்லாவற்றையும் ஒருமித்த ஸங்கல்பத்தாலேயே நிகழ்த்துகிறார்கள் என்றும் தெளிவாகிறது.

4. ஆக, 'ஸ்வாதீன த்ரிவித சேதன அசேதன ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதம்' என்ற ஸ்ரீவைகுண்ட கத்யத்தில் ஸ்ரீ ராமானுஜர் விவரிக்கிற படி, ஸகல சேதன, அசேதன வஸ்துக்களின் தன்மை, இருப்பு மற்றும் செயல்கள், ஸர்வேஸ்வரனின் கட்டுப்பாட்டில் உள்ளன எனத் தெளிவு ஆகிறது.


5. இப்படி இருக்க, இயல்பான சேஷத்வத்தை கொண்ட சரணாகதன் விஷயத்தில், ஸ்வதந்த்ரனான ஸர்வேஸ்வரன் க்ருபையினால், ஒரு சில விஷயங்களில் சேஷித்வத்தை உண்டாக்கினால், சேஷத்வமும் சேஷித்வமும் ஒருவர் விஷயத்தில் கூடி இருக்கக் கூடுமோ?

6. இந்த உலகத்தில் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்த படியும் மற்றவரிடமிருந்து உதவி பெற்ற படியும் உள்ள நிலையை காண்கிறோம் அன்றோ? அதே போல், ஒரு சரணாகதன் மற்றொரு

சரணாகதனுக்கு தொண்டு செய்யும் போது சேஷனாகவும், அவரிடமிருந்து தொண்டைப் பெறும் போது சேஷியாகவும் ஆகிறான். உதாரணமாக, இரு பாகவதர்கள் ஒரு திவ்ய தேச யாத்திரை மேற் கொள்ளும் போது, ஒருவர் இருவரின் ஆகாரத்திற்காக தளிகை செய்வதும் மற்றவர் இருவரின் வஸ்த்ரங்களை துவைப்பதும் ஏற்பட்டல், அந்த செயல்களுக்கு ஏற்ப ஒருவரே சேஷனாகவும் சேஷியாகவும் இருக்கக் காணலாம் அல்லவா?

7. இதனால், ஞானம் உள்ள சரணாகதன், ஈஸ்வரன் தன் இச்சை காரணமாக, தனக்கு ஒரு சேஷித்வத்தை கொடுத்தால், அந்த சேஷித்வமும் எம்பெருமானின் இன்பத்திற்காகவே என்று அறிந்து தனது ஸ்வரூபத்தில் நிஷ்டையோடு இருக்க வேண்டும்.

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: அஸ்மத் ஸர்வ குருப்யோ நம:
சரணாகதன் இங்குள்ள காலம் இருக்க வேண்டிய முறை
புருஷார்த்தகாஷ்டாதிகாரம் (குறிப்புகள்) - ஸ்வாமி தேசிகன் அருளிய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம்



புருஷார்த்தகாஷ்டை அதிகாரத்தின் முடிவுரை: சரணாகதனுக்கு பாகவதர்களின் திருவருளே விரும்பத் தக்கது

1. இப்படி பாகவத சேஷத்வத்தில் மன உறுதி கொண்ட ஒரு சரணாகதன், பகவத் கைங்கர்யத்துக்கு எல்லையாய் அமைவது பாகவத கைங்கர்யம் என்ற சாரத்தை உணர்ந்து, கவனம் கொள்ள வேண்டிய மிக முக்கிய செயல்கள்:

# சாஸ்த்ரங்களுக்கு ஆதாரமான, வேதம் மற்றும் வேதாந்தம் (உபநிஷத்) ஒருவராலும் இயற்றப் பட்டது அல்ல. அதனால் அவை 'அபௌருஷேயம்' எனப் படுகிறது. ஸ்ரீமந் நாராயணன் சமஷ்டி ஸ்ருஷ்டி (அசேதன தத்வங்களின் உற்பத்தி) தொடக்க காலத்தில் தன் முதல் படைப்பான ப்ருஹ்மாவிற்கு வாய்மொழி கொண்டு உபதேசித்தது வேதம் மற்றும் உபநிஷத். ஆக, இந்த சாஸ்த்ரங்களை மீறிய செயல்களான அபராதங்களை, ஒரு சரணாகதன், செய்யாமல் இருத்தல் மிக அவசியம்.

# 'தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்ய அகார்ய விவஸ்திதௌ. ஞாத்வா சாஸ்த்ர விதானோக்தம் கர்ம கர்தும் இஹ அர்ஹஸி' என்று கண்ணன் கீதையில் கூறினான்.

அதாவது, சாஸத்ரத்தில் விதித்தபடி 'எது செய்ய தக்கது' மற்றும் 'எது செய்யத் தகாதது' என்பதை அறிந்து செயல் படவேண்டும். ஆக, சரணாகதன் சாஸ்த்ரத்திரத்தில் சந்தேகமற்று இருத்தல் வேண்டும்.

# ப்ரும்மா இருக்கும் ஸத்ய லோகம் உள்பட, ப்ராக்ருத லோகங்களில் உள்ள, ஸகல தேவதைகளும் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் ஆதிக்கத்திலேயே இருக்கிறார்கள் என்கிறது சாஸ்த்ரங்கள். ஸர்வேஸ்வரனான கண்ணன், தன்னை பூஜிப்பதனாலேயே, இங்கும், அங்கும், எங்கும் நற்கதியை அடையலாம் என்றும் கீதையில் பல ஸ்லோகங்களின் வாயிலாக அருளிச் செய்தான். ஆக, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனைத் தவிர வேறு எந்த தேவதைகளிடமும் எந்த விதமான சம்பந்தமும் அற்று இருத்தல் நிச்சயமாகத் தேவை என்பதை அறிந்து, ஒரு சரணாகதன், செயல்பட வேண்டும்.


# தனக்கு வந்து சேரும் ஸுக போகங்களை தன் முயற்சியால் வந்ததாக ஒருபோதும் கருதாமல் இருத்தல் அவசியம். மேலும், தனக்கு வந்து சேரும் ஸுக போகங்களை தன் பலனுக்காக என்றும் கருதாமல் இருத்தலும் அவசியம்.

2. இதையே, 'கார்யமித்யேவ யத் கர்ம நியதம் க்ரியதே அர்ஜுன. ஸங்கம் த்யக்த்வா பலம் சைவ ஸ த்யாக ஸாத்விகோ மத:' என்று கண்ணன் கீதையில் அருளினான்.

அதாவது, சாஸ்த்ரத்தில் உள்ள அனைத்து நித்ய (ஸந்த்யாவந்தனம், திருவாராதனம் போன்றவை), நைமித்திக (தர்ப்பணம், ஸ்ரார்தம் போன்றவை) மற்றும் காம்ய கர்மாக்களை (சாஸ்த்ர ஞான சம்பாத்யம், பாகவத கைங்கர்யம், கோவில் செல்லுதல் போன்றவை) ஸாத்வீக த்யாகத்தோடே அனுஷ்டிக்க வேண்டும். அந்த ஸாத்வீக த்யாகமாவது,

# கத்ருத்வ த்யாகம் : செயல்களை செய்யும் போது, ஸர்வேஸ்வரனே நடத்தி வைக்கிறான் என செய்ய வேண்டும்.

# மமதா த்யாகம் : அப்போது, 'என்னால் செய்யப்படுகிறது' என்ற எண்ணத்தையும் விட்டு செய்ய வேண்டும்.




# பலத் த்யாகம் : அந்த செயல்களால் வரும் பலன் ஸர்வேஸ்வரனின் உகப்புக்காக என்ற எண்ணம் வேண்டும்.

4. 'வேதம் அறிந்த பகவர் வியக்க விளங்கிய சீர் நாதன் வகுத்த வகை பெறு நாம் அவன் நல்லடியார்க்கு ஆதரமிக்க அடிமை இசைந்து அழியா மறை நூல் நீதி நிறுத்த நிலை குலையாவகை நின்றனமே' என்று கூறி புருஷார்த்தகாஷ்டாதிகாரத்தை நிறைவு செய்கிறார் ஸ்வாமி தேசிகன்.

அதாவது 'வேதங்களை அறிந்த பாகவதர்களும் வியக்கும்படியான உயர்ந்த குணங்களைக் கொண்ட எம்பெருமான், தான் இட்ட கட்டளையாகிய பாகவத கைங்கர்யத்தை உணர்ந்து, ஏற்று, முறை தவறாராமல் ஒரு சரணாகதன் நடந்து போக வேண்டும்'. ஆக, சரணாகதனுக்கு பாகவதர்களின் திருவருளே விரும்பத் தக்கது என்பது புருஷார்த்தகாஷ்டை அதிகாரத்தின் சாரம்.